## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

**1) சமீபத்தில் எந்த சர்வதேச நிறுவனமானது உலக வேலை வாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்ட போக்குகள் 2019 (World Employment and social outlook trends WESO) வெளியிட்டது?**

A] IMF

B] ILO

C] ADB

D] World bank

- ✓ சர்வதேச பணியாளர் கழகமானது (International Labour organisation ILO) 2019 ஆம் ஆண்டுக்கான உலக வேலைவாய்ப்பு மற்றும் சமூக கண்ணோட்ட போக்குகள் அறிக்கையை வெளியிட்டது.
- ✓ இந்த அறிக்கையின் படி 2019 ஆம் ஆண்டுக்கான வேலைவாய்ப்பின்மை சதவீதம் 4.9% ஆக குறைந்தும் 2020ஆம் ஆண்டில் நிலையான அமைப்புடன் காணப்படும்.
- ✓ இந்த அறிக்கையில் கடந்த 2018 ஆம் ஆண்டு 3.3 பில்லியன் மக்கள் முறைசாரா வேலைவாய்ப்பு துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருந்தார்கள் என கூறுகிறது.
- ✓ அந்த ஆண்டுகளில் வேலைவாய்ப்பற்ற வர்களின் எண்ணிக்கை 172 மில்லியனிலிருந்து 174 மில்லியன் ஆக உயர்ந்து காணப்பட்டது.
- ✓ இதில் பெண்களின் பங்கும் குறைந்தே காணப்பட்டது.
- ✓ மொத்த வேலைவாய்ப்பில் 48 சதவீதம் பெண்களும் 75 சதவீதம் ஆண்களாலும் சூழப்பட்டிருந்தது. இதில் ஐந்தில் மூன்று பகுதியினர் ஆண்களாகவே இருந்தனர்.
- ✓ 15 முதல் 24 வயதுடைய இளைஞர்கள் மத்தியில் நிலவும் வேலைவாய்ப்பின்மை 11.8 சதவீதம் ஆக இருந்தது. இது மற்ற வயது பிரிவினரை விட மிக அதிகமான வேலைவாய்ப்பின்மை சதவீதமாகும்.

**2) எந்த விண்வெளி நிறுவனமானது பிரபஞ்சத்தின் தோற்றத்தை ஆராய்வதற்காக SPHEREx mission-னை ஏவ முடிவு செய்துள்ளது?**

A] NASA

B] JAXA

C] Roscosmos

D] ISRO

winmeen.com

- ✓ அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா ஸ்பியர்**X** என்ற விண்வெளி தொலைநோக்கியை **2023**ல் விண்ணுக்கு அனுப்புவதாக தெரிவித்து இருக்கிறது. இந்த தொலைநோக்கி இரண்டு ஆண்டுகள் வரை உயிர்ப்புடன் விண்வெளியில் இருக்கும்.
- ✓ **spectrophotometer for the history of the universe epoch of reionization and Ices explorer** என்பது இதன் சுருக்கமாகும்.
- ✓ பிரபஞ்சத்தின் தோற்றத்தை அறிந்து கொள்வதே இந்த தொலைநோக்கியின் குறிக்கோளாகும்.
- ✓ இந்த தொலைநோக்கியானது கண்களுக்குப் புலப்படாத ஆப்டிகல் மற்றும் அக சிவப்பு விளக்குகளை பயன்படுத்தி வானத்தை ஆராயவிருக்கிறது.
- ✓ இந்த தொலைநோக்கியின் உதவியால் அண்டத்தைப் பற்றிய பல்வேறு விடை தெரியா கேள்விகளுக்கு விடை அளிக்க இயலும்.
- ✓ இந்தத் தொலைநோக்கி ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வானத்தை ஆராய்ந்து **96** நிற படைகளால் ஒரு புதிய வரைபடத்தை உருவாக்கும். மேலும் இது நட்சத்திரங்கள் மற்றும் புதிய கிரகங்கள் உருவாகும் இடங்களில் நீர் மற்றும் பிற கரிம மூலக்கூறுகளை ஆராயும்.
- ✓ வானவியல் ஆராய்ச்சியாளர்கள் இந்த தொலைநோக்கியின் மூலம் தொகுக்கப்பட்ட தகவல்களை கொண்டு **300** மில்லியன்களுக்கு மேற்பட்ட விண்மீன் திரள்களைப் பற்றியும் நமது பால்வீதியில் உள்ள **100** மில்லியன் நட்சத்திரங்களைப் பற்றியும் அறிந்து கொள்வதற்கு உதவும்.

**3) 83**வது சீனியர் தேசிய பாட்மிடன் சாம்பியன்ஷிப் **2019** பெண்கள் ஒற்றையர் பிரிவில் வெற்றி பெற்றவர் யார்**?**

**A]** ஜுவாலா கட்டா

**B]** பிவி சிந்து

**C]** அஸ்வினி பொன்னப்பா

**D]** சாய்னா நேவால்

- ✓ கவுகாத்தியில் நடைபெற்ற **83**வது சீனியர் தேசிய பாட்மிண்டன் சாம்பியன்ஷிப் **2019** பெண்கள் ஒற்றையர் பிரிவில் சாய்னா நேவால் வெற்றி பெற்றார். இவர் நான்காவது முறையாக இந்த பட்டத்தை வென்றுள்ளார். இறுதிச் சுற்றில்
- ✓ **21** க்கு **18 21** க்கு **15** என்ற செட் கணக்கில் பிவி சிந்து வை இவர் வீழ்த்தி இந்த பட்டத்தை வென்றார்.
- ✓ ஆண்கள் பிரிவில் சவுரப் வர்மா **21**க்கு **18 21** க்கு **13** என்ற செட் கணக்கில் லக்ஷயா சென் னை வீழ்த்தி பட்டத்தை வென்றார்.

- ✓ முன்னதாக பிரணவ் ஜெர்ரி சோப்ரா மற்றும் சிராஹ் செட்டி ஆகியோர் **21** க்கு **13 22** க்கு **20** என்ற செட் கணக்கில் அர்ஜுன் எம் ஆர் மற்றும் **slok** ராமச்சந்திரன் ஜோடியை வீழ்த்தி ஆண்கள் இரட்டையர் பிரிவு பட்டத்தை வென்றனர்.

**4)** நாற்பதாவது சர்வதேச பாலைவன திருவிழா **2019** ராஜஸ்தானின் எந்த மாவட்டத்தில் தொடங்கப்பட்டது?

**A]** பார்மர்

**B]** உதயப்பூர்

**C]** ஜெய்சல்மர்

**D]** ஜோத்பூர்

- ✓ **40** ஆவது சர்வதேச பாலைவன திருவிழா **2019** ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்சல்மர் என்னும் மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி மாதம் **17**-ஆம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் பங்குபெற்றனர்.
- ✓ பாலைவன மாநிலத்தின் கலாச்சார பண்பாட்டை உலகுக்கு பறைசாற்றும் விதமாக மூன்று நாள் கொண்டாடப்பட்ட இந்த திருவிழாவானது கோட்டை ஏரியில் இருந்து ஊர்வலமாக தொடங்கிவைக்கப்பட்டது.
- ✓ இந்த திருவிழாவில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளான மிஸ்டர் **desert,Ms.**மூமல், மீசை போட்டிகள் டர்பன் அணியும் போட்டிகள், இசை மற்றும் அவர்களது கலாச்சார நிகழ்வுகள் நடந்தேறியது.
- ✓ எல்லைப் பாதுகாப்புப் படையினரால் பிரத்தியேகமான ஒட்டக டாட்டூ நிகழ்ச்சி நடைபெற்றது.
- ✓ இந்த விழா தொடங்குவதற்கு முன்னதாக கடந்த பிப்ரவரி மாதம் **14**ஆம் தேதி நடைபெற்ற புல்வாமா தாக்குதலில் உயிரிழந்த **40** சிஆர்பிஎஃப் வீரர்களை நினைவு கூறும் விதமாக இரண்டு நிமிட மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது.

**5)** கீழ்க்காணும் எந்த கிரிக்கெட் அணி **2019** ஆம் ஆண்டிற்கான ஈரானி கோப்பையை வென்றது?

**A]** விதர்பா

**B]** ரெஸ்ட் ஆப் இந்தியா

**C]** மும்பியா

**D]** கர்நாடகா

- ✓ நாக்பூரில் நடைபெற்ற ஈரானிய கோப்பை டோர்னமெண்டில் சாம்பியன் அணியான விதர்பா, ரெஸ்ட் ஆஃப் இந்தியா அணியை வீழ்த்தி அவர்களது பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது.
- ✓ தொடர்ந்து இரண்டாவது முறையாக ஈரானிய கோப்பையை கைப்பற்றுவதில் மும்பை மற்றும் கர்நாடக அணியைத் தொடர்ந்து விதர்பா அணி மூன்றாம் இடத்தில் உள்ளது.
- ✓ ஈரானிய கோப்பையில் தொடர்ச்சியாக மூன்று செஞ்சுரிகள் அடித்து ரெஸ்ட் ஆஃப் இந்தியா அணியைச் சேர்ந்த **hanuma vihari** என்பவர் சாதனை படைத்துள்ளார்.
- ✓ வெற்றி இலக்கான **280** அடைய **11** ரன்கள் உள்ள நிலையில் விதர்பா அணி வெற்றி பெற்றது.
- ✓ இந்த கோப்பையில் வென்ற மொத்த பரிசு தொகையை புல்வாமா தாக்குதலில் வீர மரணம் அடைந்த வீரர்களுக்காக விதர்பா அணியின் தலைவர் பயஸ் பசல் அளித்துள்ளார்.

**6) Mallakhamb World Championship 2019 பட்டத்தை எந்த நாடு கைப்பற்றியது?**

**A]** சிங்கப்பூர்

**B]** இந்தியா

**C]** ஈரான்

**D]** மலேசியா

- ✓ முதல் முறையாக நடத்தப்பட்ட **Mallakhamb World Championship 2019** இல் இந்தியா பட்டத்தை வென்றது. இது மும்பையில் உள்ள சிவாஜி பூங்காவில் கடந்த பிப்ரவரி மாதம் **17**-ம் தேதி நடைபெற்றது.
- ✓ இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த போட்டியில் **15** நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றனர். ஸ்பெயின், ஜெர்மனி, செக் குடியரசு, இத்தாலி, **usa**, ஈரான், நார்வே, இங்கிலாந்து, பிரான்ஸ், மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான், வியட்நாம் மற்றும் இந்தியா போட்டி போட்டன.
- ✓ இதில் இந்தியா **244.73** புள்ளிகளை பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது. **44.45** புள்ளிகளுடன் சிங்கப்பூர் இரண்டாவது இடத்திலும் **30.22** புள்ளிகளுடன் மலேசியா மூன்றாவது இடத்திலும் வெற்றி பெற்றன.
- ✓ இந்த நிகழ்ச்சியில் ஜெர்மன் **mallakam** குழுவின் பயிற்சியாளர் ரூத் அன்சர்பேரர் பண்டைய இந்திய விளையாட்டு முறையை காணொலிக் காட்சி மூலமாக வழங்கினார்.

- ✓ ஜெர்மன் குழுவும் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.
- ✓ இதில் பண்டைய விளையாட்டு முறையான கயிற்றிலோ அல்லது கம்பங்களிலோ தடகள வீரர்கள் யோகா மற்றும் ஜிம்னாஸ்டிக்களை செய்து காண்பித்தனர்.

7) டெல்லி கால்பந்து கழகத்தால் முதல் முறையாக "கால்பந்து ரத்னா" என்று அறிவிக்கப்பட்டவர் யார்?

A] சுப்ரதா

B] பய்சுங் பூடியா

C] சுனில் சேத்ரி

D] குரு ப்ரீத் சிங் சந்து

- ✓ சர்வதேச கால்பந்து போட்டிகளில் இந்திய அணிக்காக சிறந்த பங்கினை ஆற்றிய சுனில் சேத்ரி அவர்களுக்கு இல் டெல்லி கால்பந்து கழகத்தால் '**football** ரத்னா' என்ற பட்டம் வழங்கப்பட்டுள்ளது.இந்த டெல்லி **football** கழகம், மாநில அரசாங்கத்தால் பராமரிக்கப்படுகிறது.
- ✓ **2019** ஆம் ஆண்டுக்கான பத்ம ஸ்ரீ விருது பட்டியலில் சுனில் சேத்ரி அவர்களது பெயர் ஆறாவது இந்திய கால்பந்து வீரராக பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கேப்டன் ஃபென்டாஸ்டிக் என இவர் பிரபலமாக அறியப்படுகிறார். புகழ்பெற்ற கால்பந்து வீரரான கிறிஸ்டினோ ரொனால்டோ வை தொடர்ந்து இவர் இரண்டாவது அதிகமான கோல்களை சர்வதேச விளையாட்டு போட்டியில் அடித்துள்ளார். மேலும் இவர் **AIIF** வீரராக **2007, 2011, 2013, 2014, 2017** ஆகிய ஐந்து ஆண்டுகளில் அறியப்பட்டுள்ளார்.

8) எந்த மாநில அரசாங்கம் சமஸ்கிருதத்தை மாநிலத்தின் இரண்டாவது அதிகாரப்பூர்வமான மொழியாக மாற்ற மசோதாவை தாக்கல் செய்தது?

A] நாகலாந்து

B] சிக்கிம்

C] கர்நாடகா

D] ஹிமாச்சல பிரதேசம்

- ✓ கடந்த பிப்ரவரி மாதம் **16**ஆம் தேதி ஹிமாச்சல பிரதேச சட்டசபை, சமஸ்கிருத மொழியை இரண்டாவது அதிகாரப்பூர்வமான மொழியாக மாற்ற மசோதாவை தாக்கல் செய்தது. இதன்

அடிப்படையில் ஹிமாச்சல பிரதேச அதிகாரப்பூர்வ மொழி மசோதா **2019** சட்ட திருத்தத்தை, நீர்ப்பாசனம் மற்றும் பொது சுகாதார அமைச்சர் மகேந்திரசிங் தாகூரின், தாக்கல் செய்தார்.

- ✓ இந்த மசோதா எந்த ஒரு விவாதமும் இன்றி தாக்கல்செய்யப்பட்டது. இமாச்சலப் பிரதேசத்தின் முதல் அதிகாரப்பூர்வ மொழி இந்தி ஆகும்.இந்த மாநிலத்தின் பெயரான ஹிமாச்சல் சமஸ்கிருத மொழியிலிருந்து எடுக்கப்பட்டதாகும். சமஸ்கிருதத்தில் ஹிமா என்றால் பணி என்றும் ஆச்சல என்றால் நிலம் அல்லது வசிப்பிடம் என்றும் ஆச்சாரிய திவாகர் ஷர்மா அவர்களால் கூறப்படுகிறது. இவர் ஒரு புகழ்பெற்ற சமஸ்கிருத மேதை ஆவார்.
- ✓ சி.எம்.எஸ் சர்வேயின்படி இந்தியாவிலேயே ஹிமாச்சல பிரதேச அரசாங்கம் ஊழல் மிகக் குறைவான மாநிலமாக அறியப்படுகிறது.

**9) DMSPC ல் Controller and ASG யாக ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட இந்திய அதிகாரி யார்?**

A] சந்திரமௌலி இராமநாதன்

B] சினேகலதா ஸ்ரீவஸ்தவா

C] ராம் ஷங்கர் கார்த்தர்யா

D] மகேஷ் சர்மா

- ✓ இந்தியாவைச் சேர்ந்த சந்திரமௌலி இராமநாதன் என்பவரை ஐக்கிய நாடுகள் சபை **controller and assistant secretary general for program planning budget and finance in the department of management strategy policy and compliance** ஆக நியமித்தது.
- ✓ உருகுவே நாட்டைச் சேர்ந்த பெட்டினா டக்கி பார்சியோடஸ் என்பவரை தொடர்ந்து சந்திரமௌலி ராமநாதன் பதவியில் நீடிக்கிறார்.
- ✓ இது உலகளாவிய மேலாண்மை பகுப்பு மற்றும் கொள்கை வடிவமைப்பு போன்ற வணிக அமைப்புகளை சார்ந்த பணியாகும்.

**10) பொறியியல் மாணவர்களுக்கான "InfyTQ" என்ற கற்றல்செயலியை எந்த ஐடி நிறுவனம் வெளியிட்டுள்ளது?**

A] WIPRO

B] Microsoft

C] Infosys

D] Facebook

- ✓ இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய ஐடி நிறுவனமான இன்ஃபோசிஸ் பொறியியல் மாணவர்களுக்கான **InfyTQ** என்ற கற்றல் செயலியை இந்தியாவில் அறிமுகப்படுத்தி உள்ளது.இந்த செயலி மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு பொறியியல் மாணவர்களுக்காக பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட முற்றிலும் இலவசமான செயலி ஆகும்.
- ✓ மாணவர்களின் தொழில் நுட்பம் மற்றும் தொழில் சார்ந்த அறிவினை வளர்ப்பதற்கு உகந்தது.இந்த செயலி மொபைல் மற்றும் கணினியிலும் பயன்படுத்த முடியும்.
- ✓ இந்த செயலியின் மூலம் மாணவர்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் கல்வி கற்க இயலும்.
- ✓ மேலும் இந்தச் செயலியின் மூலம் மாணவர்கள் தகவல் பரிமாற்றத் திறன், மின்னஞ்சல் பரிமாற்றம், சுயமுன்னேற்றம் போன்றவற்றை கற்றுக்கொள்ள இயலும்.

winmeen.com